# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்

---

(1998, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 17.75 தபாற் செலவு: ரூபா 5.25

**1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்**

[1998 திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. – ஓ 55/95
4388

## இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தைத் தாபித்தல்

இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தைத் தாபித்தல்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்கெனக் குறித்துரைக்கப்பட்ட பெயர்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம், அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

2-டீ 049801 - 1,100 (98/08)

நிறுவகத்தின் பணிகள்.

3. நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் கொண்டுநடாத்தப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்களையும் சேவைகளையும் கருத்திட்டங்களையும் தொடர்தல்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கு அல்லது திட்டங்களுக்கு இணங்க, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியில் மனித மூலவள அபிவிருத்தி மற்றும் பாடவிதான அபிவிருத்தி என்பன தொடர்பிலான கொள்கை உருவாக்கத்தின்மீது அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதலும், ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கி உதவியளித்தலும் ;

(இ) ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கு அல்லது திட்டங்களுக்கு இணங்க, இலங்கையில் மனித மூலவள அபிவிருத்தி, பாடவிதான அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி என்பன சம்பந்தப்பட்ட திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதலும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கி உதவியளித்தலும் ;

(ஈ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியில் நிகழ்ச்சித்திட்டங்களையும் சேவைகளையும் ஏற்பாடுசெய்யும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சித் தராதரங்களை, ஆணைக்குழுவின் சார்பிலும் ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரிலும் கண்காணித்தல் ;

(உ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சேவைகளையும் ஏற்பாடுசெய்தல் ;

(ஊ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாக ஆசிரியர் பரீட்சைக்கும் அங்கீகாரத்துக்குமான ஒரு முறையை அமுல்படுத்துதலும் பேணுதலும் ;

(எ) பயிற்சி நோக்கங்களுக்காகத் தோதான நுணுக்கங்களை மேற்கொள்ளுதல் உட்பட, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியில் ஆசிரியர்களைப் பயிற்றும் முறையுடன் தொடர்புபட்ட பழக்கங்களை ஆரம்பித்தலும் ஊக்குவித்தலும் ;

(ஏ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி, மனித மூலவள அபிவிருத்தி, பாடவிதான அபிவிருத்தி, போதனாமுறையியல், போதனா தொழில்நுட்பவியல், கல்வித்தொழில்நுட்பவியல், தொழில் வழிகாட்டலும் உசாத்துணையும் ஆகிய பல்வேறு பணிமுறைத் துறைகளில் உயர்தொழில்சார் சேவைகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஐ) பட்டதாரி மட்ட மற்றும் பட்டதாரி கடந்த மட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை ஏற்பாடு செய்தலும் மேம்படுத்தலும் ;

(ஒ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் செயற்பாடு, நிறுவனங்களினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் கைத்தொழில் தேவைகள் பற்றிய மதிப்பீடு, ஆசிரியர் பயிற்சித் தேவைகள், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அம்சங்கள் என்பன உட்பட, அதன் சகல அம்சங்கள் மீதும் ஆராய்ச்சியையும் ஏனைய கற்கைகளையும், மேற்கொள்ளுதலும் ஊக்குவித்தலும் ;

(ஓ) அவசியமானவிடத்து, தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகளின் உதவியுடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பில் மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் வேலைக்களங்களையும் ஆதரவளித்தலும் நடாத்துதலும், நூல்கள், நாளேடுகள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடுதலும் ; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் பணிகளை ஒத்த பணிகளை நிறைவேற்றும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைதலும் ஒருங்கிணைதலும்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

4. நிறுவகமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்பப் பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல் ஆகிய ஏதேனும் அம்சம் தொடர்பில் ஆராய்ச்சியையும் அளவீடுகளையும் புலனாய்வுகளையும் தொடக்குதல், ஊக்குவித்தல், நடாத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ;

(ஆ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித்துறையில் பயிற்சியாளர்களாகத் தகைமை பெற விரும்புகின்ற ஆட்களுக்காக, வெவ்வேறு போதனாமுறைகளுக்கூடாக கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் பயிற்சிநெறிகளையும் கொண்டுநடாத்துதலும், அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களையும் பயிற்சிநெறிகளையும் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளைச் சித்தியெய்தியுள்ள ஆட்களுக்குச் சான்றிதழ்கள், திப்புளோமாக்கள், இணையுரிமைப் பட்டங்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புப் பட்டங்கள் என்பவற்றை வழங்குதல் ;

(இ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக நூலகங்கள், வேலைக்களங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் வேறு வசதிகள் என்பவற்றைப் பொருத்துதலும் பேணுதலும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித்துறையில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவதற்குப் தேவைப்படும் ஏனைய சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியிலும் நிறுவகத்தின் ஏனைய செயற்பாடுகளிலும், தொழில் நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி அளிக்குநர் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் பயிற்சி நெறிகளையும் நடாத்தும் நோக்கத்துக்காகப் பிராந்திய நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஊ) நிறுவகமானது அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் நிறுவகத்துக்கு ஆலோசனை யளித்து உதவியளிக்கும் நோக்கத்துக்காக, 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொழில்பயிற்சிப் பேரவைகளைப் பயன்படுத்துதலும் அத்தகைய பேரவைகளின் செயற்பாடுகளை இயலச் செய்தலும் ஒருங்கி ணைத்தலும் ;

(ஊ) தகவல் மற்றும் ஆளணிப் பரிமாற்றத்துக்காகவும் பொதுவாக நிறுவகத்தின் பணிகளைப் புரிவதற்கு உசிதமானவையாகக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகவும் இலங்கையிலுள்ளதாயினுஞ் சரி அல்லது வெளிநாட்டிலுள்ளதாயினுஞ்சரி, நிறுவகத்தினால் புரியப்படும் பணிகளை ஒத்த பணிகளைப் புரியும் கல்விசார் அல்லது வேறு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் ;

(எ) நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட வசதிகளுக்காக அல்லது உபகரணத்துக்காக கட்டணங்களை அல்லது வேறு இறுப்பனவுகளை விதித்தலும் அறவிடுதலும் ;

(ஏ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக் காக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்த கைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், வாடகைக்குவிடுதல், அடைவுவைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(ஐ) நிறுவகத்தின் பயிற்சியாளர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போருக்கு நிதிஉதவி, நலன்புரி மற்றும் பொழுதுபோக்குவசதிகள், வீடுகள் மற்றும் வேறு இடவசதி என்பனவற்றை ஏற்பாடுசெய்தல் ;

(ஒ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகள் எல்லாவற்றையும் நேரடியாகவோ அல்லது நிறுவகத்தினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்ளுதலும் நிறைவேற்றுதலும் ;

(ஓ) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் தொடர்பாகவும் அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவிநீக்கம் மற்றும் அவர்களுக்கு லீவு வழங்கல் என்பன உட்பட, அவர்கள் தொடர்பாகவும் விதிகளை ஆக்குதல் ;

(ஔ) நிறுவகத்தினால் பயிற்சியளிக்கப்படுவதற்கென தெரிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கான உள்ளிடப் பயிற்சி கொடுப்பதற்காகத் தொழில்தருநர்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் ; அத்துடன்

(க) நிறுவகத்தின் அபிப்பிராயப்படி நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது உசிதமானவையான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களைச் செய்தல்.

## பாகம் II

## சபையின் அமைப்பு

நிறுவகத்தின் நிருவாகம் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல்.

5. (1) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு என்பன (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளுநர்சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்மூலம் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்.

(3) மூன்றாண்டு வேலைத்திட்டமொன்றையும் வருடாந்தத் திட்டத்தையும் நிகழ்ச்சித்திட்டத்தையும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தையும், அதன் சார்பில் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கிணங்க, தயாரிப்பது சபையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுவதற்கெனச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. (1) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :– சபையின் அமைப்பு.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :–

(i) தொழிற்பயிற்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர். இவர் சபையின் தவிசாளராக இருப்பார் ;

(ii) ஆணைக்குழுவின் தவிசாளர், இவர் சபையின் துணைத்தவிசாளராக இருப்பார் ; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்து வேறு உறுப்பினர்கள், இவர்களுள் மூவர் தனியார் துறையிலுள்ள தொழிலதிபர்களிடையேயிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும். (இவர்கள் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், பதவி விலகல்மூலம், இறப்புதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் தமது பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் எந்நேரத்திலும் அமைச்சருக்கு அப்பயன்பட எழுதப்பட்ட கடிதமூலம் தமது பதவியிலிருந்து விலகலாம், அத்துடன் அத்தகைய பதவி விலகலானது அமைச்சரினால் அது ஏற்றுக்கொள்ளப்படும்வரை பயனுடையதாதலாகாது.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒருகாலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாதவராக இருக்குமிடத்து, அமைச்சர் அவரது இடத்தில் செயற்படவென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(5) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதினால், அதற்கான காரணம் எதுவும் காட்டாமல் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம் அத்துடன் அதன்மேல் அவ்வுறுப்பினர் அவரது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) (அ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது பதவிவிலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், 6 (1) (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இறந்த, பதவிவிலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில் உறுப்பினராக இருப்பதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் முன்னதாகவே பதவிவிலகினாலொழிய அல்லது இறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் எவ்வுறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்டாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும் எப்பதவியின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினராக வந்தாரோ அப்பதவியை அவர் வகிக்கும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

சபை உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு உள்ள தகுதியீனம்.

7. ஆள் ஒருவர் —

(அ) பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது வந்தால் ;

(ஆ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால் ;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கிமுறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கிமுறிந்த ஆள் ஒருவராக இருந்தால் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப் பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்திருந் தால் அல்லது அனுபவித்துக் கொண்டிருந்தால்,

அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப் படுவதிலிருந்து அல்லது உறுப்பினராகத் தொடர்ந் திருந்து வருவதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

சபையின் செயலாளர்.

8. பதினாறாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் செயலாளராதல் வேண்டும். அவர் சபையின் எக்கூட்டத்திலும் சமுகமளிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அதில் வாக்களிப் பதற்கு உரித்துடையவராகார்.

ஏதேனும் வெற்றிடம் இருப்பது காரணமாக அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாகச் சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றனவாகா.

9. சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பது எது எப்படியிருப்பினும் செயலாற்றலாம் ; அத்துடன் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மாத்திரம் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாதலோ செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலோ ஆகாது.

சபை உறுப்பினர் களின் ஊதியம்.

**10.** சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது உறுப்பினர்கள் எவருக்கும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் கூட்டங் கள்.

**11.** (1) தவிசாளர் அல்லது அவரில்லாதபோது துணைத் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்கு தல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளரும் துணைத்தவிசாளரும் வருகைதராதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) சபையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது ஒரு மாதத்தில் ஒரு தடவையாவது நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதலும் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுசெய்யப்படு வதற்கான எல்லா விடயங்களும் சமுகமாயிருக்கும் உறுப் பினர்களில் பெரும்பான்மையோரின் வாக்குமூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கும் உறுப்பினர், தமது சொந்த வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக, சபை அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவலைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலும் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

அமைச்சரின் பணிப்புகள்.

**12.** அமைச்சர் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பது தொடர்பாகவும் அதன் பணிகளை நிறை வேற்றுதல் தொடர்பாகவும் எழுத்தில் அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளைச் சபைக்குக் கொடுக்கலாம் ; அத்துடன் சபையானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றிப் புலனாய்வு செய்வதற்கு கட்டளையிடுவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

13. அமைச்சர், அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் நிறுவகத்தின் செயற்பாடுகள் யாவும் அல்லது செயற்பாடுகளுள் எதுவும் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டுமென, காலத்துக்குக்காலம் கட்டளையிடலாம் ; அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல், சபையானது அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அத்தகைய வசதிகள் எல்லாவற்றையும் வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தகவல்கள் எல்லாவற்றையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

நிறுவகத்தின் இலச்சினை.

14. நிறுவகத்தின் இலச்சினை –

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ;

(இ) சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்தில் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

கல்வி அலுவல்கள் ஒன்றியம்.

15. (1) தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சித்துறைகளில் அல்லது நிறுவகத்தின் வேறு ஏதேனும் செயற்பாடுபற்றி சிபாரிசுகளைச் செய்வதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "ஒன்றியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய எண்ணிக்கையினவான கல்வித்துறை அலுவல்கள் ஒன்றியங்களைத் தாபிக்கலாம்.

(2) ஒவ்வோர் ஒன்றியமும், அத்தகைய ஒன்றியம் தாபிக்கப்பட்டதான தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சித் துறைகளில் பிரபல்யம் வாய்ந்த ஆட்களிடையே இருந்தும் நிறுவகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களிடையேயிருந்தும் சபையினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஓர் ஒன்றியத்துக்கென ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின் நோக்கெல்லைக்குள்ளாக நிறுவகத்தின் கல்வித்துறை அலுவல்களுக்கு அவ்வொன்றியம் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, ஒவ்வோர் ஒன்றியமும் பின்வரும் தத்தவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க நிறுவகத்தினால் விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளை நடாத்துதல், அத்துடன் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்து ஏனைய விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திசெய்துள்ளவர்களான ஆட்களை, நிறுவகத்தின் சான்றிதழ்களை, திப்புளோமாக்களை, இணைஉரிமைப் பட்டங்களை அத்துடன் வேறு கல்விசார் சிறப்புப்பட்டங்களை வழங்குவதற்குத் தகுதிவாய்ந்த ஆட்களாக சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஆ) தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி சம்பந்தப்பட்ட கருமங்கள்மீது சபைக்கு ஆலோசனை வழங்குதல் ;

(இ) சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்பற்றிப் பரிசீலித்து அதன்மீது அறிக்கையிடுதல் ;

(ஈ) நிறுவகத்தின் கற்கைப் பயிற்சிநெறிகள், போதனா நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கருமங்கள்மீது சபைக்குச் சிபாரிசுகளும் அறிக்கைகளும் செய்தல் ;

(உ) நிறுவகத்தின் கற்கைப் பயிற்சிநெறிகள், போதனா நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகள் என்பவற்றுக்குத் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கென விதிக்கப்படவேண்டிய தேவைப்பாடுகளைச் சபைக்குச் சிபார்சு செய்தல் ;

(ஊ) கற்கைப் பயிற்சிநெறிகள், போதனா நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள் என்பன தொடர்பிலான விதிகளை ஆக்குதலும் அத்தகைய விதிகளை அங்கீகாரத்துக்கெனச் சபைக்குச் சமர்ப்பித்தலும் ;

(எ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைச் சபைக்குச் சிபார்சு செய்தல் ;

(ஏ) புலமைப்பரிசில்கள், பதக்கங்கள் மற்றும் ஏனைய சிறப்புப்பட்டங்கள் வழங்குவதற்கான நிபந்தனைகளைச் சபைக்குச் சிபார்சுசெய்தல் ;

(ஐ) ஒன்றியத்தின் பணிகளைப் புரிவதில் அதற்கு உதவுவதற்கென சபையின் அனுமதியுடன் குழுக்களை நியமித்தலும் ஏதேனும் அத்தகைய குழுவின் உறுப்பினர்களாக இருப்பதற்கென ஒன்றியத்தின் உறுப்பினர்களாக இராத ஆட்களை நியமித்தலும்.

## பாகம் III

## பணிப்பாளர் தலைமையதிபதியினதும் நிறுவகத்தின் பணியாட்டொகுதியினதும் நியமனம்

நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதியை நியமித்தல்.

16. (1) அமைச்சர், சபையின் கலந்தாலோசனையுடன், சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருக்கவேண்டிய பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் வேதனம் உட்பட அவரின் தொழில் நியதிகளும் நிபந்தனைகளும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக நிறுவகத்தின் அலுவல்களின் பணிப்பு அத்துடன் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் என்பவற்றுக்கும் நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நிருவாகத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதும் போதிலெல்லாம், இச்சட்டத்தின்மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம் ; அத்துடன் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், பணிப்பாளர் தலைமை அதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைவாக, அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையை பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(4) அமைச்சர், அதற்கான காரணம் எதுவும் காட்டாது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம் ; அத்துடன் அத்தகைய அகற்றுகை பற்றி ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்துதலாகாது.

(5) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி, அவர் இறப்பதன்மேல், (4) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுதவதன்மேல் அல்லது அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் பதவிதுறப்பதன் மேல் வறிதாக வருதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள் பணிப்பாளர் தலைமையதிபதியாக மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால், அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனமொன்று செய்யப்படும்வரை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கென சபையின் உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதி.

**17.** (1) நிறுவகமானது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கடமைகளைப் புரிவதற்கும் அவசியமென அது கருதும் அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் சேவையாளர்களும் நிறுவகத்தினால் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய முறையில் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும் பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப் பட்டவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் "இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்வதற்கு உடன்பட்டுக் கொண்டுள்ளவரான ஆள் ஒருவரை நிறுவகம் தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் நிறுவகத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின்கீழ் அவ்வாளுக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில் உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றின் வேறு எவரேனும் ஊழியர் விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய உறுப்பினரதும் ஊழியரதும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினது அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது நிறுவகத்தினாலும் உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது உள்ளூரதிகாரசபையினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறான ஒய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட, அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) உள்ளூராட்சிச்சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகார சபையின் எவரேனும் ஊழியர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு (7) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து, அவர் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(9) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எவரும், அத்தகைய ஊழியரினதும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுஞ்சபையினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது நிறுவகத்தினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுஞ்சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான ஒய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட, அத்தகைய நியதி, நிபந்தனைகளின்கீழ் அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(10) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவகத்தின் ஓர் அலுவலர் அல்லது சேவையாளர், அவ்வலுவலர் அல்லது சேவையாளரினதும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன் அதே சம்மதத்துடன் நிறுவனத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

நிறுவகத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் அலுவலர்களுக்கும் செயலாளர்களுக்கும் கையளித்தல்.

18. நிறுவகமானது (இப்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவம் தவிர்ந்த) அதன் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எதனையும் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம்; அத்துடன் ஏதேனும் அத்தகைய தத்துவம் அல்லது பணி, நிறுவகத்தின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புக்கு அமைவாக, அத்தகைய அலுவலரினால் அல்லது சேவையாளரினால் பிரயோகிக்கப்படுதல் அல்லது புரியப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## நிதி

நிறுவகத்தின் நிதியம்.

19. (1) நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(ஆ) நிறுவகத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(இ) இலங்கையிலிருந்தாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயிருந்தாயினுஞ்சரி எத்தன்மைத்தான எம்மூலத்திலிருந்தேனும் வருமானம், கட்டணங்கள், இறுப்பனவுகள், கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் வகையாக பெறப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகள் யாவும்.

(3) நிறுவகத்தின் நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப் படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப் படக்கூடிய ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்மூலம் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகள் யாவும்.

*நிறுவகத்தின் கடன் எடுப்பதற்குள்ள தத்துவங்கள்.*

**20.** நிறுவகமானது, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதேபோன்ற ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட ஏதேனும் பொதுவான நியதிகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கென நிறுவகத்துக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய பணத்தொகை களை மேலதிகப் பற்றுவகையாக அல்லது வேறுவகையாகக் கடனாகப் பெற்றுக்கொள்ளலாம், அல்லது கடன் நியதிகளின்மீது இணங்கிப்பேசிப் பெற்றுக்கொள்ளலாம் :

ஆயின், இப்பிரிவின்கீழ் நிறுவகத்தினால் கடனாகப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை தொடர்பில் வெளிநிலுவை யாகவுள்ள பணத்தொகைகளின் கூட்டுமொத்தமானது எந்நேரத்திலும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

21. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். நிறுவகத்தின் நிதி ஆண்டு.

22. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். நிறுவகக் கணக்குகளின் கணக்காய்வு.

## பாகம் V

## பொது

23. (1) (இப்பிரிவில் "தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்துக்கு உரித்தாக்கப்பட்டனவும் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் நோக்கங்களுக்கென நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று பயன்படுத்தப்பட்டனவுமான அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம் யாவும் நியமித்த தேதியிலிருந்து நிறுவகத்துக்குக் கைமாற்றப்படுதலும் எல்லா நோக்கங்களுக்காக நிறுவகத்துக்கு உரித்தாக்கப்பட்டிருத்தலும் வேண்டும். தேசிய தொழில் நுட்பக் கல்வி நிறுவகத்தின் பணிகளையும் ஆதனத்தையும் நிதிகளையும் அல்லது பொறுப்புக்களைக் கைமாற்றுதல்.

(2) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நோக்கங்களுக்காகத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தொடர்பாக தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் உறப்பட்டு நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்துவருவனவான எல்லாப் பொறுப்புக்களும் நியமித்த தேதியிலிருந்து நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் நிறுவகத்தின் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலியுறுத்தவும்படலாம்.

(3) அமைச்சர், தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தேசிய தொழிற்கல்வி நிறுவகத்திடமிருந்து நிறுவகத்துக்குப் பணிகளை கைமாற்ற இயலச் செய்யும் நோக்கத்துக்காக எழுத்திலான ஏதேனும் சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய நிலைபெயர்காலக் கட்டளைகளை ஆக்கலாம் என்பதுடன் அக்கட்டளைகள் நியமித்த தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்குப் பயனுடையனவாதலும் வேண்டும்.

*அரச காணியை நிறுவகத்துக்கு உரித் தாக்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.*

**24.** (1) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக ஏதேனும் அரசகாணி நிறுவகத்துக்குத் தேவைப்படுகின்றதென அமைச்சர் கருதுகின்றவிடத்து, அமைச்சர், காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், கசெற்றில் வெளியிடப்படும் (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "உரித்தாக்கற் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளைமூலம், அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகள், எவையேனும் இருப்பின், அவற்றுக்கு அமைவாக, கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியிலிருந்து நிறுவகத்துக்கு அத்தகைய காணி உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) உரித்தாக்கற் கட்டளையொன்று, அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, அத்தகைய உரித்தாக்கற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காணிக்கான பூரண உரித்தை, பாரபந்தங்கள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு, நிறுவகத்துக்குக் கொடுக்கும்பயன் கொண்டதாதல் வேண்டும்.

*நிறுவகத்துக்காக காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.*

**25.** அரசுக்குச் சொந்தமான ஏதேனும் அசைவற்ற ஆதனம் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு வதிவிடமொன்றாக அத்தகைய ஆதனம் பயன்படுவது உட்பட, நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமிடத்து, அந்த ஆதனமானது, உத்தேசக் கொள்ளுதலை, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் அங்கீகரித்தால், பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு அச்சட்டத்தின்கீழ் நிறுவகத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

*சபையானது அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல்.*

**26.** சபையானது, நிறுவகத்தின் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் ஆறுமாத காலப்பகுதி முடிவடையு முன்னர், அவ்வாண்டின்போது நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றிய பூரண விவரத்தையும் தரும் அறிக்கையொன்றை அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்; அமைச்சர் அவற்றின் பிரதிகளை பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படச்செய்தல் வேண்டும்.

27. நிறுவகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

28. சபையின் எல்லா உறுப்பினர்களும் நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர்களும் நிறுவகத்தின் அலுவலர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

29. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் —

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் எச்செயலுக்காகவும் நிறுவகத்திற்கெதிராக ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரால், செயலாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் எச்செயலுக்காகவும் அவருக்கு எதிராக,

அமைதல் ஆகாது.

சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது நிறுவகத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் நிறுவகத்தின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான எவரேனும் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய செலவு அவரால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

30. (1) அமைச்சர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது இச்சட்டத் தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகார மளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் எவ்வளவு விரைவாக வசதியோ அவ்வளவு விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப் படுதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதன் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

31. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

32. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய — பொருள்கோடல்.

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஒரு மாநகரசபை, நகர சபை அல்லது பிரதேசசபை என்று பொருளாவதுடன் ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் நேரொத்த அல்லது ஒத்த தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை என்று பொருளாகும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்.